


விருதுநகர் மாவட்டம் சிவகாசி நாராணாபுர ரோட்டில் உள்ள லலிதா மஹாலில் மதுரை மண்டல திமுக மருத்துவ அணி சார்பில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவுப் பாசறைக் கூட்டம் விருதுநகர் வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் சண்முகராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார். மாநில மருத்துவ அணி தலைவர் கனிமொழி என்.வி.என். சோமு, மாநில மருத்துவ அணி செயலாளர் எழிலன் நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர்கள் செண்பக விநாயகம், திலகவதி ஜெயராஜ், மன்சூர் அலிகான், விருதுநகர் வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் செல்வராணி, விருதுநகர் தெற்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் ஆவர். மேலும் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், அருப்புக்கோட்டை சேர்மன் சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், சிவகாசி மாநகர தி.மு.க. செயலாளர் உதயசூரியன், துணை மேயர் விக்னேஷ் பிரியா காளிராஜன், ஒன்றிய திமுக செயலாளர்கள் விவேகன்ராஜ், கோபிக் கண்ணன், தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் ராதா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, வர்த்தக அணி வனராஜ், வழக்கறிஞர் அசோக் உட்பட விருதுநகர் வடக்கு தெற்கு மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி கலைஞர் அரங்கில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான சமூக வலைதள பயிற்சிக் கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ. கீதாஜீவனுடன் தி.மு.க. செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா ஆகியோர் கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைதளங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து சமூக வலைதள தன்னார்வலர் இளமாறன் உரையாற்றினார்கள். இந்நிகழ்வில் இளைஞர் அணி மண்டலப் பொறுப்பாளர் இன்பா ஏ.என்.ரகு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன், மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நல்ல முறையில் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்!

# மினி பேருந்துகள் 1500க்கும் மேற்பட்டவை இயக்க நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல்!



சென்னை, ஏப். 24 -

சட்டப் பேரவையில் மினி பேருந்து இயக்குவது சம்பந்தமாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி:** முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட அற்புதமான திட்டம் இந்தச் சிற்றுந்து திட்டம். இப்போது மீண்டும் நம்முடைய முதல்வர் அவர்கள் அந்தச் சிற்றுந்துத் திட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறார்கள். அதை மே ஒன்றாம் தேதியன்று துவக்க இருக்கிறார்கள். ஆனால், அதை இயக்குவதற்கு தனியார்களுக்கு permitகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த wheel base உள்ள பேருந்துகள் கிடைக்க வில்லை. அந்த wheel baseஐ உயர்த்தித் தந்தால்தான் அந்த mini busகளை அவர்கள் வாங்கி இயக்க முடியும். புதிய பேருந்துகளும் இப்போது கிடைப்பதில்லை.

ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை மனதிலே கொண்டு, அந்த wheel baseகளை மாற்றித் தந்தால் பல பள்ளிக்கூட பேருந்துகளையெல்லாம் அவர்கள் வாங்கி, பழைய பேருந்துகளை,

அந்தச் சிற்றுந்திலே அவர்கள் இயக்க ஆவன செய்ய முடியும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதில் தனி கவனம் செலுத்தி தொடர்ந்து இந்தத் திட்டதை தடுப்பதற்காக சில சூழ்நிலைகள் உருவாவது இல்லாமல் அனைத்து கிராமப்புற ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே இந்தச் சிற்றுந்துகளை ஆணைகளுக்கு அவர்கள் வண்டிகளை வாங்கி இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேருந்துகள் இயக்குவதிலே மிகுந்த அனுபவம் கொண்டவர். அவர் கூறுகின்ற ஆலோசனை முக்கியமான ஆலோசனைதான். ஆனால், wheel baseஐ அதிகரித்தால் பெரிய பேருந்துகளுக்கும் அதற்கும் பிரச்சினை வரும்.

ஏற்கெனவே, பெரிய பேருந்துகள் இயக்குகின்றவர்களுக்கு, இந்த மினி பேருந்துகள் இயக்குகின்ற வழித்தடங்கள் குறித்த பல்வேறு கருத்துகள் இருக்கின்றன.

எனவே, நிர்வாக சிக்கல் வராமல் இருப்பதற்காகத்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த மினி பேருந்துத் திட்டம் நலிவடைந்திருந்ததை மீண்டும் சரிசெய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, இப்போது அந்தப் பேருந்துகள் புதிய பேருந்து நிலையங்களோ அல்லது பக்கத்தில் இருக்கிற அரசு மருத்துவமனைகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரி போன்ற இடங்கள் வரைக்கும் கூடுதலாக இயக்குவதற்கு பல்வேறு சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன.

எனவே, அதன்மூலம் இந்தப் பேருந்துகள்—கிட்டத்தட்ட 1,500க்கும் மேற்பட்ட permitகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பலரும் புதிய பேருந்துகளும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக நல்ல முறையில் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### மதுரை பெரியார் சிலை முதல்

# வைகை ஆற்று பாலம் - அண்ணாசிலை வரை உயர் மட்டப்பாலம்!

## சட்டப்பேரவையில் கோ.தளபதி கோரிக்கை!



**சென்னை, ஏப்.24-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் கோ.தளபதி கேட்ட கேள்வியும் அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் பதிலும் வருமாறு:-**

**கோ. தளபதி:** மதுரை பெரியார் சிலை முதல் வைகை ஆற்றுப் பாலம் அருகில் உள்ள அண்ணா சிலை வரை உயர் மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** மதுரை மாவட்டம், நெல்பேட்டை முதல் அவனியாபுரம் புறவழிச் சாலை சந்திப்பு வரை உயர் மட்டப் பாலம் அமைக்கும் பணி, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது. அத்தகைய சூழ்நிலையில் 9.11.2022 அன்று சென்னையில் நடைபெற்ற 24வது உயர் மட்ட அதிகாரக் குழுHigh Power Committee ஆய்வுக் கூட்டத்தில் மதுரை மாநகரம் மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றியுள்ள வெளி வீதிகள் பாரம்பரியம் மிக்க பகுதியாக உள்ள காரணத்தினால், அதனைப் பாதிக்கும் வகையில் எந்த வித உயர் மட்டப் பாலமோ, கட்டடமோ அமைக்க வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, உயர் மட்டப் பாலத்திற்கு பதிலாக, சாலை மேம்பாடு செய்வதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் முதற்கட்டமாக அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியான தெற்கு வாசல் சந்திப்பு முதல் அவனியாபுரம் புறவழிச் சாலை சந்திப்பு அதாவது பெரியார் சிலை வரை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தவும் தெற்கு வாசல் சந்திப்பு அருகே உள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு இணையாக புதிய மேம்பாலம் கட்டவும், சாலை சந்திப்புகளை மேம்படுத்தவும் நில எடுப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதனால், இதற்கான திட்ட அறிக்கை இப்பொழுது தயார் செய்யப்பட்டு வருகிறது.

**கோ. தளபதி:** மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வரக்கூடிய இடம். அதேபோல, மதுரையின் மையப் பகுதியான கடை வீதிகளுக்கு பொதுமக்கள் வரக்கூடிய நான்கு வெளி வீதி என்பது மிக முக்கியமான சாலைகள். அதனை தரைவழியாக அகலப்படுத்தி, மேம்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தெற்குவாசல் பாலத்திலிருந்து, அவனியாபுரம் வரை உயர் மட்டப் பாலம் அமைத்துத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அமைச்சர் எ.வ. வேலு:** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஏற்கெனவே மேம்பாலம் கட்டுவது என்றுதான் முடிவு செய்யப்பட்டது. High Power Committee சொன்ன காரணத்தினால், சாலையை விரிவுபடுத்தி, ஆங்காங்கே junction improvement என்ற அடிப்படையிலே போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய பணிகளை மேற்கொள்வதாக இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்அவர்கள்மதுரை பழங்காநத்தம் bypass சாலை இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை ஏற்கெனவே அவர்கள் நேரடியாக வைத்திருக்கிறார்கள். மதுரைபழங்காநத்தம் பாலம் என்பது முதன்முதலாக புறவழிச் சாலையுடன்கூடிய சேவைச் சாலையாக அமைக்கப்பட்டது. தற்போது இச்சாலை 6 வழிச் சாலையாக உள்ளது. இச்சாலைகள் மதுரைபோடி இரயில்வே கடவு எண் 4ஏவில் இரயில்வே இருவழித்தடம் மேம்பாலம் உள்ளது.

இரயில்வே மேம்பாலத்திற்கு இருபுறமும் 6 வழித்தடமாக உள்ளது. அதனால், இரயில்வே மேம்பாலத்தில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, இரயில்வே மேம்பாலத்திற்கு அருகில் புதிதாக இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் என்று இந்த மாமன்றத்தில் 1.4.2023ல் நானே அறிவிப்பு செய்தேன்.

அந்த அறிவிப்பின்படி களஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் நேற்றைய முன்தினம் நானே நேரடியாக அந்த கள ஆய்வை மேற்கொண்டேன். விரைவிலே மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அந்த இரயில்வே மேம்பாலம் விரிவுபடுத்தி கட்டப்படும்.

**கோ. தளபதி:** மதுரை, பழங்காநத்தத்திலே ஏற்கெனவே உள்ள மேம்பாலத்திற்கு இணையாக மற்றொரு பாலம் தருகிறேன் என்று அறிவிப்பின்மூலம் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, மதுரா கல்லூரியிலிருந்து TVS nagar இரயில்வே மேம்பாலம், அழகப்பா நகர் இரயில்வே மேம்பாலம் உள்ளிட்ட பசுமலை வரை ஓர் உயர்மட்ட சாலை ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** முதலமைச்சர் அவர்கள் மதுரைக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இப்பொழுது கோரிப்பாளையம் பாலம் ஒன்றும், அப்பல்லோ பாலம் ஒன்றும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப்பணிகள்நிறைவடைந்த உடனேயே முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் திறந்து வைத்துவிட்டு, மூன்றாவதாக உறுப்பினர் சொல்கிற கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



திருச்செந்தூர் வட்டம் காயல்பட்டினம் நகராட்சி டி.சி. டபிள்யூ சாகுபுரம் ஜெயின் பாலம் திறந்து வைக்கும் பணியினை மீன்வளம் – மீனவர் நலன் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர் ராதா கிருஷ்ணன் தொடங்கி வைத்தார் மாநில மீனவர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஜீ.ஸ்ரீனிவாசன் டி.சி.டபிள்யூ உதவியாளர், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ரமேஷ், காயல்பட்டினம் நகர்மன்ற தலைவர் முத்து முகமது, ஆத்தூர் ஒன்றிய செயலாளர் சதீஷ்குமார் சேர்மன் ஜனகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மேலப்பாளையம் சந்தை ரவுண்டானாவிலிருந்து ஆஸாத் சாலை வழியாக

# திருநெல்வேலி டவுன் வரை சிற்றுந்து இயக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் பாளையங்கோட்டை மு. அப்துல் வகாப் கேள்வி!



**சென்னை, ஏப்.24-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பாளையங்கோட்டை தொகுதி உறுப்பினர் கேட்ட கேள்வியும் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:-**

**மு. அப்துல் வகாப்:** பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையம் சந்தை ரவுண்டானாவிலிருந்து ஆஸாத் சாலை வழியாக திருநெல்வேலி டவுன் வரை சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** தமிழ்நாடு அரசு புதிய விரிவான திட்டம், 2024ஐ தமிழ்நாடு அரசிதழ் எண் 37, நாள் 24.1.2025 ஆம் தேதி வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் மினி பஸ் வழித்தடங்களை அடையாளம் கண்டு அவற்றை மாவட்ட நாளேடுகளில் வெளியிட்டுள்ளனர். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தங்கள் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாளையங்கோட்டை தொகுதி மேலப்பாளையம் சந்தை ரவுண்டானா முதல் ஆஸாத் சாலை வழியாக திருநெல்வேலி டவுன் வரை செல்கின்ற வழித்தடத்தையும் இன்னும் கூடுதல் வழித்தடங்களும் கண்டறியப்பட்டால் அவற்றை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள் மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கவும் பிறகு அதற்கான பேருந்து வசதியை ஏற்பாடு செய்து தரவும் வழிவகை செய்யப்படும்.

**மு.அப்துல் வஹாப்:** பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி, மேலப்பாளையம் சந்தை ரவுண்டானாவிலிருந்து ஆசாத் சாலை, மேலநத்தம், கருப்பந்துறை வழியாக திருநெல்வேலி டவுன் பகுதிக்கு சிற்றுந்துmini bus இயக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, அந்த வழித்தடங்கள் குறித்து மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு, தனியார் சிற்றுந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.அப்துல் வஹாப்:** பாளையங்கோட்டையானது விரிவாக்கப் பகுதிகள் அதிகமாக உள்ள வளர்ந்துவரும் நகரமாகும். எனவே, பாளையங்கோட்டை பேருந்துநிலையத்திலிருந்து மார்க்கெட் பகுதிக்கும், அரசு ஊழியர்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளான என்.ஜி.ஓ. காலனி, பெருமாள்புரம் ஆகியவற்றில் மக்கள் நெருக்கம் இருப்பதால், அந்தப் பகுதிகளுக்கு mini buses அதிகமாக தேவைப்படுகின்றன.

அப்பகுதிகளுக்கு mini buses இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடங்களை மிகத் தெளிவாக எழுதிக் கொடுப்பாரேயானால், அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

